# அருப்புக்கோட்டை நகராட்சி

**விளம்பி ஆண்டு ஆவணி மாதம் நாள் : 24.08.2018 வெள்ளிக் கிழமை மாலை 3.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :— திரு.சு.சு.சுரேஷ்குமார்**
**தனி அலுவலர்**

**பொருள் 1 :** அருப்புக்கோ விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 7வது தமிழ்நாடு மாநில உயர்மட்டக்குழு (State High Powered Committee Meeting)கூட்ட நாள் 13.08.2018 ன்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளான மைக்ரோ கம்போஸ்ட் யார்டுகள் மற்றும் சுற்றுச்சுவர், சாலை அமைக்கும் பணிகளுக்கு ரூ.352.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் 22866/ பி3/2018 நாள் 23.08.2018 ல் கீழ்கண்ட நிதி ஒதுக்கீட்டின் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. மத்திய அரசு பங்குத்தொகை | 35% | = ரூ. 1,23,20,000 |
| 2.மாநில அரசு பங்குத்தொகை | 55% | = ரூ. 1,93,60,000 |
| 3.நகராட்சி பங்குத்தொகை | 10% | = ரூ. 35,20,000 |
| மொத்தம் | 100% | = ரூ. 3,52,00,000 |

**திட்டப்பணிகள்**

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 32 | அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் மைக்ரோ கம்போஸ்ட் யார்டு மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும பணி | 3 MT | 53.00 |
| 2 | 31 | அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட சப்பைராமசாமி தெரு பகுதியில் மைக்ரோ கம்போஸ்ட் யார்டு மற்றும் சுற்றுச்சுவர், சாலை அமைக்கும் பணி | 3 MT | 54.00 |
| 3 | 3 | அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட காந்திமைதானம் பகுதியில் மைக்ரோ கம்போஸ்ட் யார்டு மற்றும் சுற்றுச்சுவர், சாலை அமைக்கும் பணி | 4 MT | 51.00 |
| 4 | 7 | அருப்புக்கோட்டை நகராட்சி மதுரை ரோடு நீர்தேக்க தொட்டி வளாகத்தில் மைக்ரோ கம்போஸ்ட் யார்டு மற்றும் சுற்றுச்சுவர், சாலை அமைக்கும் பணி | 3 MT | 55.00 |
| 5 | 7 | இரயில்வே பீடர் ரோடு கிழக்கு 1வது தெரு பகுதியில் மைக்ரோ கம்போஸ்ட் யார்டு மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 3 MT | 52.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 9 | அருப்புக்கோட்டை நகராட்சி நேதாஜி ரோடு நீர்தேக்க தொட்டி வளாகத்தில் மைக்ரோ கம்போஸ்ட் யார்டு மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 3 MT | 51.00 |
| 7 | | அருப்புக்கோட்டை நகருக்குள் அமைக்கப்பட உள்ள மைக்ரோ கம்போஸ்ட் யார்டுகளுக்கு குப்பைகளை கொண்டு சேர்ப்பதற்கு பேட்டரி மூலம் இயங்கக்கூடிய வாகனம் (20எண்ணம்) வாங்குதல் | 20 Nos | 36.00 |
| | | **மொத்தம்** | | **352.00** |

மேற்கண்ட பணிகளுக்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று நகராட்சி பங்கு தொகையுடன் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.4453/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.484</u>**

**பொருள் 2 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் கேங்கூலியாக பணிபுரிந்த திரு.கு.கருப்பசாமி (லேட்) என்பவர் உடல்நலக் குறைவு காரணமாக 30.03.2015ல் பணியினை காலமானதால் கருணை அடிப்படையில் பணி வழுங்குவது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(MD) No.12064 of 2018 வழக்கறிஞர் ஊதியம் ரூ.8000/—ஐ திரு.திலீப்குமார்BA., B.L., வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.3402 /2015/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.485</u>**

**பொருள் 4 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறைகளில் All in one கணினிகள் புதியதாக வாங்கி பொருத்துவதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.1.10 இலட்சத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண். 7936/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.486</u>**

**பொருள் 5 :** தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு (General Revision of Property tax) மேற்கொள்ளவும், இதன்படி நகரிலுள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு தற்போதைய சொத்துவரியிலிருந்து 50 சதவீதம் மிகாமலும் வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100 சதவீதம் மிகாமலும், வணிக நிறுவனங்களுக்கு 100 சதவீதம் மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டுமென நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MAIV) அரசாணை G.O.MS.No.73, நாள் 19.07.2018ல் ஆணையிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து தற்போது மேற்படி சொத்துவரி தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுகல் துறை (MAIN) அரசாணை எண் G.O. (MS) No.76, நாள் 26.07.2018ல் முந்தைய அரசாணையில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும் வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு 100 சதவீத மிகாமலும் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண். 7282/2018/அ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.487**

**பொருள்6 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவேண்டி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுகல் துறை அரசாணை எண் G.O(MS) No. 73 மற்றும் 76ல் தெரிவிக்கப்பட்டுள்ளதால் படிவங்கள் அச்சடிப்பதற்கும், நாளிதழ்கள் மற்றும் மாவட்ட அரசிதழ் பிரசுரம் செய்வதற்கும் மற்றும் இது சம்பந்தமான இதர செலவினத்திற்கும் ஆகும் உத்தேச செலவீன தொகை ரூ.5.00 (ஐந்து இலட்சம் மட்டும்) நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண். 7282/2018/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.488**

**பொருள்7 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட அலுவலகக்கட்டிடத்தில் (AMC) உள்ள 25 எண்ணம் குளிர் சாதன இயந்திரங்களின் வருடாந்திர பராமரிப்பு பணி 2017–18ம் ஆண்டு முடிவடைவதால் அடுத்த 2018–19ம் வருடத்திற்கு பராமரிப்பு பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.1,00,000/–க்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.422, நாள்.15.05.2018ல் நிர்வாக அனுமதி வழுகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 07.08.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Arctic Air Colling System Aruppukottai | மதிப்பீட்டு விலைக்கே |
| 2. | M/s.JT.Refrigerato Air Conditoner , Madurai | 11.39% மதிப்பீட்டு விலையை விட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Arctic Air Colling System, Aruppukottai, அவர்கள் மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம். ந.க.எண்.4337/2016/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.489**

**பொருள்8 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட தெருக்களில் உள்ள 24 W LED தெரு விளக்குகள் மழை, மின்னல் காரணமாக பழுதாகி எரியாமல் உள்ளது. மேற்கண்ட LED விளக்குகள்

பழுது பணிகள் 104 எண்ணத்தில் பழுது பணிகள் பார்ப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.70 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.459, நாள்.10.07.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 07.08.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Sri Sudharsana Engeering Works, Salem | 3.13% மதிப்பீட்டு விலையை விட அதிகமான |
| 2. | M/s.Veena Enterprises Gangaikondan | மதிப்பீட்டு விலைக்கே |

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Veena Enterprises, Gangiakondan அவர்கள் மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.6012/2018/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.490**

**பொருள்9 :** இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2017 – 18 ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 34 சத்தியவாணி முத்து தெருவில் (4 1/2'') மினிபவர்பம்ப் அமைக்கும் பணி செய்ய விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க.சி3/2392/2016, நாள்.28.08.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை ரத்து செய்து மாற்று பணியாக வார்டு எண் 34 புதுத்தெருவில் (4 1/2'') மினிபவர்பம்ப் அமைக்கும் பணி செய்ய விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க.சி3/2392/2017, நாள்.29.06.2018 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் 07.08.2018 அன்று மறுஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.S.K.சுப்பாரெட்டியார் அருப்புக்கோட்டை | 3.97%மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |
| 2. | திரு.R.பஞ்சவர்ணம் அருப்புக்கோட்டை | 0.01 %மதிப்பீட்டு விலையைவிட குறைவாக |

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.01 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.R.பஞ்சவர்ணம், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.7728/2017/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.491**

**பொருள் 10 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொறியியல் பிரிவு பழைய நகர்மன்ற கூட்ட அரங்கிற்கு இடம் மாற்றப்படுவதால் பிரிவு எழுத்தர்கள் கணினிகள் வைத்து பயன்படுத்த LAN இணைப்புகள் தேவைப்படுவதால் LAN இணைப்பு அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.50000/—ஐ வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.8146/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.492</u>**

**பொருள் 11 :** விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு DBC மஸ்துார் பணியாளர்கள் 75 நபர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் 01.09.2018 முதல் 30.11.2018 வரை 90 நாட்களுக்கு பணியமர்த்த நாள் 1க்கு ரூ.2089/—வீதம் ஆகும் செலவுத் தொகை ரூ.14,04,000/— தொகைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.5473/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.493</u>**